★ தனி இதழ் 1¼அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 6உ சனி (21—7—56) ★ ★ வெளியூர்: ஆடி 7உ ஞாயிறு (22—7—56) [இதழ் 32

பத்து ரூபாய்க்காக உயிரை மாய்த்துக் கொண்ட பெண்!

கோலாப்பூர், சூலை 20—

22 வயதுப் பெண் ஒருவர், மார்க்கெட்டிற்குச் செல்லும் வழியில் 10 ரூபாய் நோட்டு ஒன்றைத் தவறவிட்டுவிட்டதற்காக, 'வீட்டில் திட்டுவார்களே' என்று பயந்து, கிணற்றுள் குதித்து, தற்கொலை செய்துகொண்டார் என்று தெரிய வருகிறது.

இந்தப் பெண் இரு குழந்தைகளுக்குத் தாய் என்றும் கூறப்படுகிறது.

'ஒரு விசைத்தறி 20 கைத்தறிகளை ஒழித்துவிடும்'

'வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாகும்'

முதலாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில், சோமப் பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை 83,087-லிருந்து 1,17,598-ஆக அதிகரித்தது.

'கைத்தறியை அழியாமல் காப்பாற்றுங்கள்'

'புதிய ஜவுளிக் கொள்கையை அமுல் செய்யாதீர்'

தோழர் சோமப்பா எச்சரிக்கை

பம்பாய், சூலை 20—

"புதிய ஜவுளிக் கொள்கையை அமுல் செய்ய வேண்டாம்; கைத்தறித் தொழில் அழிந்துபோகாமல் காப்பாற்றுங்கள்,"

என்று, அகில இந்திய கைத்தறி போர்டு உறுப்பினர் தோழர் எம். சோமப்பா அவர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

"கைத்தறித் தொழில் வீழ்ந்துகொண்டிருக்கும் நேரத்தில், சர்க்கார் தங்கள் ஜவுளிக் கொள்கையைப் புதுப்பித்திருக்கிறார்கள்.

"சர்க்கார், நிவாரணத்திற்காகக் கஞ்சித் தொட்டிகள் திறக்கவேண்டிய அளவுக்கு கைத்தறி உற்பத்தி பாதிக்கப்பட்டுக் குறைந்து போய்க் கிடக்கிறது.

"சர்க்காரின் புதிய கொள்கை அமுல் செய்யப்படுமானால், அது, மேலும் நிலைமையை நெருக்கடிக்கு ஆளாக்கும்.

"விசைத் தறிகளைப் புகுத்தும் திட்டம், கைத்தறிகளை ஒழித்து, வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் கடுமையாக்குவதாக அமையும்.

"விசைத் தறிக்கும், கைத்தறிக்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டினை உணர சர்க்கார் மறுத்துவிட்டிருக்கிறது.

"விசைத்தறி, தொடர்ச்சியாக மூன்று 'ஷிப்டு'கள் வேலை செய்ய முடியும்; ஆனால், மனிதர்களே நெய்யவேண்டியுள்ள கைத்தறி, எட்டு மணி நேரம் மட்டுமே வேலை செய்ய முடியும்.

"எனவே, ஒரு விசைத் தறி, சுமார் 20 கைத்தறிகளை ஒழித்துவிடும் என்ற அச்சம் நியாயமானது—உண்மையானதாகும்," என்றும் அவர் விளக்கம் தந்திருக்கிறார்.

விசைத்தறி புகுத்தும் திட்டம்

கைத்தறி நெசவாளரை பாதிக்காதாம்

கூட்டுறவு நெசவாளருக்கு சர்க்கார் உதவியாம்

மத்திய மந்திரி 'உறுதிமொழி' தருகிறார்

புதுடில்லி, சூலை 20—

"இந்திய சர்க்காரின் புதிய ஜவுளிக்கொள்கையின் அடிப்படையான அம்சம், இப்போது கூட்டுறவு இயக்க அணைப்பில் உள்ள கைத்தறியாளர்கள் எல்லாம், விசைத் தறிகளை ஏற்றுக் கொள்வதற்கு உதவியளிக்கப்படுவார்கள் என்பதே!

"விசைத் தறிக்கு மாறுவது என்பது, கைத்தறியாளர்கள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக்கொண்டு, வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வதற்கான — உற்பத்திச் சாதனத்தில் செய்யப்படவேண்டிய — தவிர்க்க முடியாத ஒரு முன்னேற்ற நடவடிக்கையாகும்.

"துணித் தேவை அதிகரிப்பிற்கு ஒப்பவே இந்தவிசைத் தறி மாற்றமும் ஒழுங்கு படுத்தப்படும்; மேலும், விசைத் தறிகளைப் புகுத்தும் போது, இப்போதுள்ள கைத்தறியாளர் அனைவருக்கும் வேலை கிடைக்குமாறு பார்த்துக்கொள்ளத் தவறமாட்டோம்."

என்று, மக்கள் சபையில், நூல் பொருள் உற்பத்தித் தொழில் இலாகா மந்திரி நித்தியானந்த கனுங்கோ கூறியிருக்கிறார்.

காமராசரின் அதிமேதாவிலாசம்!

ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டிற்கு அநீதி இழைக்கப்படவில்லையாம்

கோவில்பட்டி, சூலை 19—

"தி. மு. கழகத்தினர், வடநாடு தென்னாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துவதாகக் கூறுகின்றனர். 'தென்னாட்டிற்கு, ஐந்தாண்டுத் திட்டங்களில் நியாயமான பங்கு கிடைக்கவில்லை' என்றுபேசுகின்றனர்; இந்தக் குற்றச்சாட்டு நியாயமானது அல்ல.

"இந்தியாவின் ஒற்றுமை குறித்து அதிகமாகக் கவலைப்படுகிறது காங்கிரஸ்; எனவே எல்லா மாநிலங்களையும் ஒரே மாதிரியாகத்தான் நடத்துகிறது.

"பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் வடநாட்டில் துவங்கப்பட்டன என்றால், அதற்குக் காரணம், வடநாட்டில் தான் பெரிய ஆறுகள் இருக்கின்றன; அந்த ஆறுகளின் தண்ணீர் வீணாகிக் கொண்டிருந்தது.

"தென்னாட்டில் அப்படி ஆறுகள் இல்லை—பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைத் துவங்குவதற்கு; எனவே தான் வாய்ப்பில்லை.

"நெய்வேலி திட்டத்திற்காக ரூ. 60 கோடிவரை அனுமதிக்கப்பட்டிருக்கிறது..

"இவை எல்லாம்—ஐந்தாண்டுத் திட்டங்கள், தீர்க்கமான ஆலோசனைக்குப் பிறகுதான் தீட்டப்பட்டன; மாநிலங்களிடையே எந்தவித பாரபட்சமும் காட்டப்படவில்லை என்பதைக் காட்டுகின்றன அல்லவா?"

என்று, சென்னை மாநில முதன்மந்திரி காமராசர், இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டாராம்.

மேலும் அவர், தி. மு. க. தேர்தலில் நிற்பதை வரவேற்பதாகவும் கூறினாராம்!

'காமராசர்' கழகத்தார் கழகத் தலைவர் சூடு

தொழில் அபிவிருத்தியில் தென்னாடு அலட்சியப் படுத்தப்பட்டிருக்கிறது

நெய்வேலியும் பெரம்பூரும் தகுந்த சமாதானமாகாது

மதுரை, சூலை 20—

"சென்னை மாநிலத்தில் புதிய தொழில்கள் எதுவும் துவங்க, இரண்டாம் திட்டத்தில் வழி செய்யப்படவில்லை.

"சென்னையில் மூலதனச் செலவு நபர் ஒன்றுக்கு சராசரியாக ரூ. 19-தான்; ஆனால், இந்த விகிதம், பம்பாயிலும் கல்கத்தாவிலும் ரூ. 130 ஆகும்.

"இந்த விகிதாச்சார வேற்றுமை, 'தொழில்துறை அபிவிருத்தியில் தென்னாடு அலட்சியப்படுத்தப்படுகிறது; சென்னை மாநிலத்தின் கோரிக்கைகளுக்குரிய அங்கீகாரம் தரப்படவில்லை' என்பதைக் காட்டுகிறது.

"புதிய தொழிற்சாலைகள் துவங்க வேண்டும் என்ற நமது கோரிக்கைக்கு, நெய்வேலித் திட்டம், பெரம்பூர் கோச்சு தொழிற்சாலை இவை துவங்கப்பட்டிருக்கின்றன என்பது தகுந்த சமாதானமாக ஆக முடியாது; ஏனெனில், இவை முதல் திட்ட காலத்திலேயே உருவாக்கப்பட்டவையாகும்.

"எனவே, சென்னை மாநில சர்க்கார், இந்த உண்மைகளை, டில்லி உணருமாறு செய்வதுடன், புதிய தொழில்கள் துவங்குமாறு கேட்டுக்கொள்ளவும் வேண்டும். அது, பிரதேச கோரிக்கைகளை மட்டுமின்றி, பிரதேச வேறுபாடுகளையும் போக்குவதற்கு உதவும்,"

என்று, மதுரை—இராமநாதபுரம் மாவட்ட வர்த்தகக் கழகத் தலைவரான டி. எஸ். இராஜம் அவர்கள், கழகத்தின் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சாகும்வரையில் சர்வோதய ஊழியர் உண்ணாவிரதம்!

உறவினரால் அழைத்துச்செல்லப்பட்ட ஆசிரம பெண் திரும்புவதற்காக நடவடிக்கையாம்

ரத்லம், சூலை 20—

டாக்டர் மோகன்லால் சோர்தியா என்ற ஒரு பிரபலமான சர்வோதய ஊழியர், சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறாராம்!

எதற்காகத் தெரியுமா? இவருடைய ஆசிரமத்தில் இருந்த ஒரு பெண்ணை, அந்தப் பெண்ணின் சோதரர் வந்து பலவந்தமாக அழைத்துச் சென்றுவிட்டாராம்! அந்தப் பெண் திரும்ப தன் ஆசிரமத்திற்கு வரும்வரை, தான், உண்ணாவிரதமிருந்து சாகப் போவதாக அறிவித்திருக்கிறார், அவர்!

திலீப் நகரில் உள்ள அந்த ஆசிரமத்திலிருந்து, இந்த சர்வோதய ஊழியர், இப்போது கிளைவ் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளாராம்.

தனது நல்லொழுக்கம் பற்றி சந்தேகம் கிளப்பப்பட்டதாலேயே அந்தப் பெண் அழைத்துச் செல்லப்பட்டதாக அவர் கூறுகிறாராம்.

அந்த ஊழியரின் மனைவியார் அருகிலிருந்து, அவருக்குப் பணிவிடை செய்து வருகிறாராம்.

வல்லபசாமி என்ற ஒரு சர்வோதயத் தலைவர் சோரியாவைச் சந்தித்து வேண்டிக்கொண்டும்கூட, சோர்யா, உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்துவிட்டாராம்!

அந்தப் பெண், திரும்பத் தன் ஆசிரமத்திற்கு வந்து சேர வேண்டும்—அல்லது, அந்தப் பெண் வேறு யாராவது நண்பரின் குடும்பத்தில் சேர்ந்து வாழவேண்டும் என்று விடாப்பிடியாக அவர் கூறுகிறாராம்!

உங்களுக்குத் தெரியுமா?

புதுடில்லி, சூலை 20—

தேசிய ஒழுக்குக் கட்டுப்பாடுத் திட்டத்துக்காக, 1955-56-ம் ஆண்டில், மொத்தம் ரூ. 4,32,000 செலவிடப்பட்டதென்றும், போதனாசிரியர்களின் சம்பளம், படித்தொகைகளில், மாணவர்—மாணவிகளுக்கான சாதனங்கள், உடைகள் ஆகிய முக்கிய அம்சங்களுக்கு இத்தொகை செலவாகியது என்றும், 1956-57-ம் ஆண்டில், இவ்வகையில், மொத்தம் ரூ. 5 இலட்சம் செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளதாக மக்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

கனரக மின்சார சாதன உற்பத்தித் திட்டம்

முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாம்

புதுடில்லி, சூலை 21—

இந்தியாவில் கனரக மின்சார சாதனங்களைத் தயாரிப்பதற்கான திட்டம் சம்பந்தமான சில ஆர்ஜித வேலை, பூர்வாங்க சிவில் வேலைகள், சிப்பந்திகள் தெரிந்தெடுப்பு வேலை, தண்ணீர், மின்சார விநியோகம் ஆகிய பூர்வாங்க வேலைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதாகத் தரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 21—7—'56 சனி

உபவாச உபதேசம்!

சுமார் பத்தணா விலை தந்து இரண்டாந்தரமோ, மூன்றுந் தரமோ ஒரு படி அரிசி வாங்கியவர்கள், இன்று அதே அரிசிக்கு, பதினன்கு அணா முதல் ஒரு ரூபாய்வரை தந்து வாங்க வேண்டியிருக்கிறது என்றால், இந்த விலை ஏற்றம், மாதம் சராசரியாக 40 ரூபாய் வருமானத்தில் காலத்தை ஓட்டும் ஒரு குடும்பத்தின் வாழ்வை எவ்வளவு பாதிக்கும் என்பதைக் கணக்கிட்டுக் கூறவா வேண்டும்?

இப்படி, அரிசி முதல் எல்லா உணவுப் பண்டங்களுக்கும் போட்டி போட்டுக் கொண்டு விலை ஏற்றப்பட்டிருக்கின்றன.

முன்பு, 'ஒருவேளை உணவு—இருவேளை உபவாசம்' என்று காலந் தள்ளியவர்கள், இப்போது, மூன்று வேளையும் உபவாசத்திற்கு தங்களைப் பழக்கப் படுத்திக் கொள்ளும் நிலைக்குத் தாரத்தப்படுகிறார்கள்.

'அரிசி விலை ஏறியிருக்கிறது; அகவிலை கட்டுப்படியாகவில்லை; விலை ஏற்றத்திற்கு ஒப்ப வருமானம் உயர்ந்ததா என்றால், அதுவும் இல்லை; என் செய்வது? விலைகளை பழைய நிலைக்குக் கொண்டுவர சர்க்கார் முன் வரக்கூடாதா?'—என்று, மக்கள் அவலக் குரல் எழுப்புகிறார்கள்.

விலை ஏற்றம் துவங்கிய நாளில், சர்க்கார், 'கூர்ந்து கவனித்து வருகிறோம்; தேவையானபோது, எங்கள் அமபுறுத் தூணியிலிருந்து, 'நடவடிக்கை அம்புகள்' பறந்து சென்று, உயர உயரச் சென்று கொண்டிருக்கும் விலைகளை வீழ்த்தும்; கவலைப்படாதீர்கள்' — என்று வீராப்புப் பேசினார்கள்.

கட்டத்தில்!

இரண்டாம் கட்டத்தில், 'விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை, எங்கள் புள்ளி விவர நிபுணர்கள் மெத்தச் சிரமப்பட்டுக் கண்டுபிடித்து விட்டார்கள்; ஆனால், இந்த விலை ஏற்றத்திற்கான மூல காரணத்தை, விசேட மூளையும் அனுபவமும் பெற்ற எங்கள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்' என்று கூறினர்!

மூன்றாவது கட்டத்தில், விலை ஏற்றத்திற்கான காரணமும் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. 'எங்கள் கிடங்குகளில், ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் உற்பத்தியான உபரி உணவுத் தானியங்கள் நிரம்பிக்கிடக்கின்றன அல்லவா? அவற்றை, நியாயவிலைக்கு விற்பதன் மூலம் வியாபாரிகளில் கொள்ளை நோக்கம் கொண்டோர் பதுக்கி வைத்திருக்கும் அரிசியை வெளிக்கொணரத் திட்டமிட்டு விட்டோம்; இதுதான் எங்கள் முதல் நடவடிக்கை; இதுவே போதும், விலைகளை வீழ்த்த!' — என்று பேசினர், மூன்றாவது கட்டத்தில்!

கூர்ந்து கவனித்து, ஆராய்ச்சி செய்து மேற்கொண்ட நடவடிக்கை விலைகளை வீழ்த்திற்று என்றால், இதுவரையில் இல்லை. விலைகள் விஷம்போல நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே இருக்கின்றன. சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கையைப் பார்த்து, ஏறிக்கொண்டிருக்கும் விலைகள், விலாப்புடைக்கச் சிரிக்கின்றன!

சர்க்கார் இந்த மூன்று கட்டங்களையும் வகுத்துக்கொண்டு, ஒன்றன்பின் ஒன்றாய் தாண்டுவதற்குள், விலை ஏற்றத்தால் வெகுவாகப் பாதிக்கப்படும் விவசாய—தொழிலாள—நடுத்தர பாட்டாளி மக்கள், எத்தனையோ இரவுகளைப் பட்டினியாகக் கழித்தாயிற்று.

மனிதனை இழுத்துச் செல்லும் மனிதன்—ரிக்ஷாக்காரன், மாடு போல பார வண்டியிழுக்கும் இரண்டு கால் பிராணி இவர்களைப் போன்ற பாட்டாளிகள்—தினம் தங்களுக்குக் கிடைக்கும் சராசரி எட்டணா, பத்தணாக் கூலியைக் கொண்டு இரண்டு மூன்று உயிர்களை, இந்த நாட்டில் உயிரோடு உலவுபவர்கள் பட்டியலில் இடம்பெறச் செய்ய பெரும் பாடுபட்டு வந்தவர்கள் — இன்று, இந்தக் கொடிய விலை ஏற்றத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் கொடுமை, நினைக்கவே பயங்கரமானது!

மாதம் ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கும் அமைச்சர்களுக்கு, இந்தக் கொடுமைகளை அனுபவித்தாலன்றி புரிந்து கொள்வதற்கு மார்க்கமில்லைதான்!

'கொள்ளை இலாப நோக்கம் கொண்ட வியாபாரிகள் சரக்குகளைப் பதுக்கி வைத்திருப்பதுதான் விலை ஏற்றத்திற்குக் காரணம்' என்றால், அந்தப் பதுக்கப்பட்ட பண்டங்களை வெளிக் [illegible] டில்லி சர்க்கார் உட[illegible] ஏன்?

கொள்ளை இலாப நோக்கம் கொண்ட சமூக விரோதிகளுக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் டில்லி நடந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன?

மேற்கு வங்க மாநில சர்க்கார், 'முடக்கப்பட்டிருக்கும் சரக்குகளைப் பறிமுதல் செய்வதற்கு விசேட அதிகாரம் தேவை' என்று கேட்டபோது, டில்லி ஏன் அந்த அதிகாரத்தை வழங்கவில்லை?

எவர் எவரையோ—நல்லவர்களை—நாட்டுக்குப் பாடுபடுபவர்களை எல்லாம் சிறைக்குள் தள்ளுவதற்குப் பயன்படும் தடுப்புக் காவல் சட்டம், இந்தச் சமூகவிரோதிகளை எறெடுத்துப் பார்க்க மறுப்பதேன்?

ஒன்று, உணவுப் பண்டங்களின் ஏறியுள்ள விலைகளை நியாயமான நிலைக்குக் கொண்டுவர அரைகுறை மனதுடன், கண்துடைப்பு நோக்கத்தோடு, 'நடவடிக்கை எடுக்கிறோம்' என்று கூறுகிற கண்ணாமூச்சி விளையாட்டுடன் நின்றுவிடாமல், விலை ஏற்றத்திற்குக் காரணமானவர்களை மக்கள் முன் நிறுத்த வேண்டும் சர்க்கார்—அதன்மூலம், விலைகளை ஒழுங்குபடுத்த வேண்டும்.

அல்லது, மந்திரிகளில் மிகப் பெரும்பாலானோர், பெரும்பாலான விடயங்களில் உபதேசம் புரிவதையே மார்க்கமாகக் கைக்கொண்டிருப்பவர்கள்; அவர்கள், மக்களுக்கு உபதேசம் செய்யட்டும்—'ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிடாதீர்கள்; ஒரு வேளை சாப்பிடுங்கள்; அதுவும், வாரம் ஏழு நாட்களும் சாப்பிடாதீர்கள்; நான்கு நாள் மட்டும் ஒருவேளை விதம் உண்ணுங்கள்; மீதம் மூன்று நாளும் உபவாசம் இருங்கள்; அப்போது, விலைகள் தாமாக இறங்கிவிடும் என்று!

'இப்படி உபதேசம் செய்ய மந்திரிகளுக்குத் துணிவு உண்டா?'—என்று எவருக்கும் ஐயம் எழத் தேவை இல்லை.

'அரிசி கிடைக்காவிட்டால் என்ன? புளியங்கொட்டையைச் சாப்பிடுங்களேன்! சத்துள்ள உணவுதான் அதுவும்!'—என்று பேசிய மதோன்மத்தர்களின் அடுத்த 'கோஷ்டி'யினர் தானே, இப்போதைய மந்திரிகளும்!

சென்னை மாநிலத்தில் ஏராளமான நிலங்கள் தரிசாகக் கிடக்கிறதாம்!

பிரிவினையால் நீர்ப்பாசன திட்டங்களெல்லாம் 'நிலை'யற்றுப் போய்விட்டனவாம்

பரம்பரைப் பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள விவேகத்துடன் செயலாற்ற வேண்டுமாம்

நதித் திட்டங்கள்பற்றி மராமத்து அமைச்சர் விளக்கம்

"பிரிவினைக்குப் பிறகுள்ள சென்னை மாநிலத்தில், நீர்த் திட்டங்கள் மிகக் குறைவாய் இருக்கின்றன; திருநெல்வேலி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ஏராளமான நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன, இதை நிவர்த்திக்க நமக்குப் பக்கத்திலுள்ள மாநிலங்களையும் கலந்தாலோசித்து, துணிகரமாய், அரசியலில் விவேகத்துடன், பரவலாகத் திட்டமிட்டு வேலை செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால்தான் பாசன மின்சார அபிவிருத்தித் துறையில் முதல் இடம் வகிக்கும் நமது பரம்பரைப் பெருமையை நாம் காப்பாற்றிக்கொள்ள முடியும்,"

என்று, 'சென்னை மராமத்து அமைச்சர் சண்முக இராசேசுவர சேதுபதி அவர்கள், பாசன—மின்சார அபிவிருத்தி ஏற்பாடுகள் பற்றி சென்னை வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறியதாவது :—

"மேற்கு முகமாகப் பாய்கிற நதிகள் சம்பந்தமான இம்மாநிலத்தின் பாசனத் திட்டங்களெல்லாம்—மலம்புழா, மங்களம், வலையார், மீனக்கரைத் திட்டங்களெல்லாம்—ஏற்படப்போகிற கேரளமாநிலத்துக்குப் போய்விடும். எனவே, காவேரி ஒன்றுதான் நமக்குள்ள பெரிய நதியாக இருக்கும். இப்போதுள்ள திட்டங்கள் பூர்த்தியானால், காவேரி முழுமையிலும் பயன்படுத்தப்பட்டுவிடும். மீதியுள்ள தாமிரபரணி, தென்பெண்ணை, பாலாறு, ஆரணியாறு முதலியவை சிறிய நதிகள்; அவைகளை அதிகமாக உபயோகிப்பதற்கு வாய்ப்பு இல்லை.

"திருநெல்வேலி, இராமநாதபுரம், கோயமுத்தூர் மாவட்டங்களிலுள்ள தரிசு நிலங்களுக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்கு ஒரே ஒரு வழி, இப்போது அரபிக் கடலில் வீணாகப் போய்விழுகிற நதிகளின் தண்ணீரைத் திருப்பி விடுவதாகும்; அதற்கு திருவாங்கூர் கொச்சி சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும்.

நதித் திருப்பத் திட்டங்கள்

"மேலே குறிப்பிட்ட நதித் திருப்பத் திட்டங்கள் மூன்று; அவை, பரம்பிக்குளம்—அலையார், ஆலாடித் திட்டம், பம்பையாறுத் திட்டம்.

பரம்பிக்குளம்—அலையார்த் திட்டம் பரவலான ஒரு திட்டமாகும் அதில் ஏழு தேக்கங்கள் உண்டு. அவைகளில் ஒன்றே ஒன்றுதான் திரு-கொச்சி எல்லைக்குள் இருக்கும். மீதி ஆறும், சென்னை மாநில எல்லைக்குள் இருக்கும்

"அத்திட்டத்தின் மூலம் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம் ஆகிய தாலுகாக்களில் புதிதாக 3,20,000 ஏகரா நிலம் பாசன வசதி பெறும். சுமார் 27,000 ஏகரா நிலம் அலையாறு மூலம் பாசன வசதிபெற்று இரண்டாம் போகப் பயிரைச் சாகுபடி செய்ய வசதி கிடைக்கும்.

"அதில் 20 000 ஏகரா திருவாங்கூர்—கொச்சி எல்லையிலுள்ளது. இத்திட்டத்துக்குச் சுமார் ரூ. 32 கோடி செலவாகும். அதில் திரு—கொச்சி சர்க்கார் பங்கு ரூ 50 இலட்சம் இத்திட்டத்தின் மூலம்62,520 கிலோவாட்மின்சார சக்தி உற்பத்தி செய்யமுடியும்.

முதல் கட்டத்தில் தேக்கடி, தூவ்வக்கடவு, பெருவாரிபள்ளம், அலையார் ஆகியவைகளின் தண்ணீரை உபயோகிப்பதற்குத் தேக்கங்களும் கால்வாய்களும் அமைப்பது பற்றியது; அதன்மூலம் 1-இலட்சம் ஏகரா பயன்பெறும்; அதற்கு ரூ $6\frac{1}{2}$ கோடி செலவாகும். அதை இவ்வருடமேகூட நிறைவேற்றிவிடலாம். இரு சர்க்கார்களும், திட்டக் குழுவும், அதயகு உடன்பட்டால் போதும்.

"ஆலாடித் திட்டம்—'மேற்குப் பெரியாறு — திட்டம்' என்றும் கூறப்படும். அதுவும், பம்பையாறுத் திட்டமும், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களுக்குத் தண்ணீர் வசதி அளிக்கும். இந்தத் திருப்பத் திட்டங்கள்தான் இந்த மாநிலத்தின் எதிர்காலத்தில் பாசன அபிவிருத்திக்கான பிரதான ஆதாரமாக இருக்கும்.

பாசனத் திட்டங்கள்

"முதல் திட்ட காலத்தில் நாம் 12 பாசனத் திட்டங்களைச் சேர்த்திருந்தோம். கீழ்பவானி அணைத் திட்டம் அவைகளில் ஒன்று; அது ஒரு பெரிய திட்டம். அத்திட்டமும், வேறொரு திட்டமும் முதல் திட்ட காலத்தில் முடிவடைந்தன; மீதி 10 திட்டங்களும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நடத்தப்பட வேண்டும் 1957 வாக்கில் அவை பூர்த்தியாகலாம்.

"முதல் ஐந்தாண்டுத் திட்ட கால ஏற்பாடுகளுக்கு மொத்தம் 37·45 கோடி ரூபாய் பிடித்தது. அதனால் மொத்தம் 3,96 000 - ஏக்கரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைத்தது.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 6 புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும். அவைகளுக்கு 14·64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

"மின்சார உற்பத்தி—உபயோகப் பிரச்சினையில், சென்னை மாநிலம், இந்தியாவிலுள்ள பிரதான மாநிலங்களிலொன்றாக விளங்கி வருகிறது. முதல் திட்ட காலத்தில் மொத்தம் ரூ. 30,54,00,000 இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டது. 2,500 கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைத்து வருகிறது; அதில் 1,600 கிராமங்களுக்கு முதல் திட்ட காலத்தில்தான் வசதி செய்து கொடுக்கப்பட்டது. மேலும் 17,800 விவசாயப் பம்புகளுக்கு மின்சார சக்தி அளிக்கப்பட்டது மொத்தம் இந்த மாநிலத்தில் மின்சார விசையில் இயங்குகிற 33,000 விவசாயப் பம்புகள் இருக்கின்றன.

இரண்டாவது திட்ட காலத்தில் இந்தமாநிலத்தில் ரூ 57,60,00,000 மின்சாரத் திட்டங்களுக்காகச் செலவிடப்படும்.

"இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல நீர்வினை மின்சாரத் திட்டங்களின் பலனாக, 1958-ம் ஆண்டில், கோடைக் காலங்களில், மின்சார வெட்டு செய்யவேண்டிய நிலைமை ஏற்படாது. இப்போதுள்ள பொருளாதாரத் தேவைக்கும், எதிர்காலத்தில் பரவலாகும் தேவைக்கும் வேண்டிய மின்சாரத்தை விநியோகம் செய்வதுதான் நமது இலட்சியம் இதற்காக நாம் 10 நீர் மின்சாரத் திட்டங்களைப் பரிசீலிக்க உத்தேசித்திருக்கிறோம். அவைகளில், கம்பார் - அமராவதி, பாலாறு - பொரந்தலாறு, கூனூர்-கார்ட்டேரி - கன்னர்ப்பாலம் - கோலக்கம்பே திட்டங்கள் முக்கியமானவை.

"பாசன மின்சார ஏற்பாடுகள் அபிவிருத்தியடையும்போது, பருவமழையை நம்பியிருக்கும் நிலைமை படிப்படியாகக் குறையும் நமது பொருளாதாரம், பருவமழைகளின் போக்கை நம்பி முடங்கிக் கிடக்கிற நிலைமையை அகற்றுவதற்கு நாம் தீர்மானித்துவிட்டோம்."

'சமூதாய நீதி முறை மாற வேண்டும்'

'திருடுவது குற்றமானால்
பதுக்குவதும் குற்றமே'

"திருடரை உருவாக்கும் பதுக்கல்காரருக்குப் பாதுகாப்பு தந்துவிட்டு, திருடரை மட்டும் குற்றவாளியாக்கும் தற்போதைய சமுதாய நீதி முறையை மாற்றியமைக்க வேண்டுவது நம் காலத்தின் தேவையாகும்,"

என்று, ஆச்சாரியா, விநோபா பாவே கடலூர் கூட்டத்தில் கூறியுள்ளார்.

"திருடுவது குற்றமானால், பதுக்கி வைப்பதும் குற்றம்தான்; இந்த இயற்கை நியதியைத் தெரிந்தும் அசட்டையாக இருக்கும் பழைய சமுதாய நீதி முறை ஒரு தலைச் சார்பானது; இதை மாற்றிவிட்டு ஒரு முழு நீதி முறையை நாம் ஏற்படுத்த வேண்டும்."

"ஒருதலைச் சார்பான நீதிமுறை சமுதாயத்தில் எத்தனையோ இன்னல்களை ஏற்படுத்தி இருக்கிறது. 'முழு நீதி' முறை ஒன்றைக் கொண்டு வருவதன்மூலம், இத்தவறான போக்குகளுக்கு மாற்றம் ஏற்படுத்துவது நம் விருப்பமாகும்,' என்றும் அவர் கூறியுள்ளார்.

அதிகாரபூர்வமான காங்கிரஸ் அபேட்சகர்கள் மண் கவ்வினர்

ஜெய்ப்பூர் தேர்தல் முடிவுகள்

ஜெய்ப்பூர், சூலை 18—ஜெய்ப்பூர் நகரசபைக்கு, இராஜஸ்தான் பிரதேசக் காங்கிரஸ் நிறுத்திவைத்த அதிகாரபூர்வமான காங்கிரஸ் அபேட்சகர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றனர்.

இன்னும் 35 இடங்களுக்கு முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும்.

மாவட்ட காங்கிரஸ் கட்சியின் உதவித் தலைவராயிருந்தவர் ஒழுங்கீனமாக நடந்துகொண்டார் என்று நீக்கிவைக்கப்பட்ட கபில் தேவ் கௌதம் என்பவர், அதிகாரபூர்வமான காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்கடித்து வெற்றிபெற்றிருக்கிறார்.

'இந்திய ஒற்றுமைக்கு அடிப்படையிலேயே ஊனம்'

இந்திமொழித் திணிப்பு ஒற்றுமைக்கா உதவும்?

அரசியல் சட்டங்கள் 'இறந்து பிறந்த' குழந்தைகளா?

"சென்னையிலுள்ள சமுதாயத் தொண்டு பயிற்சிப் பள்ளிக்கூடத்தின் ஐந்தாவது ஆண்டுத் தொடக்க விழாவில் சொற்பொழிவாற்றுகையில், கவர்னர் பிரகாசா, மக்களுடைய மனத்திலும், ஆன்மீக அடிப்படையிலும் இந்திய ஒற்றுமைக்கு இடையூறான ஒரு குறைபாடு இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

"அக்குறைபாட்டிற்குக் காரணம் என்ன என்று ஆராய்வது முக்கியமானது. மக்கள் விரும்பாத கொள்கைகளையும், திட்டங்களையும் அரசாங்கம் கட்டாயமாகச் செயற்படுத்திக்கொண்டு வருவதே இதற்குக் காரணமாகும்.

"தென்னாட்டு மக்கள் விரும்பாத ஒரு மொழியை, ஒழுங்கான இலக்கணமும்—சிறப்பான இலக்கியமும் - தனக்கென ஓர் எழுத்து முறையும் இல்லாத ஒரு கலப்புக் கதம்பக் குழப்பத்தை, மக்கள் மேல் சுமத்துவதால், ஒற்றுமைக்கு மாறாக வேற்றுமைதான் ஏற்படும் என்பதைச் சென்ற சில ஆண்டுகளின் அனுபவத்தால் அரசினர் உணர்ந்திருக்க வேண்டும்.

"மக்களுடைய அன்பைப் பெறுவதுதான் நாட்டில் ஒற்றுமை நிலவுவதற்கு வழியேயொழிய, அவர்களுடைய எதிர்ப்பை நாடுவது எப்படி சிறந்த முறையாகும்?

"மொழிவழிக் கொள்கையில் மாகாணங்களை அமைக்க வேண்டும் என்ற மக்கள் கருத்தை எதிர்த்து மண்டலக் கொள்கைகளையும், பிரதேசத் திட்டங்களையும் பிடிவாதமாக உருவாக்கிக் கொண்டு வரும் இந்தியப் பேரரசின் போக்கை என்னென்று கூறுவது?

"ஒரு மொழியினருடைய ஆதிக்கத்தையும், ஒரு சிலரின் வல்லாட்சியையும் ஏற்படுத்த முயற்சி செய்யும் திட்டங்களால், ஒற்றுமையை எங்ஙனம் நிலைநிறுத்த முடியும்?

"சென்னை கவர்னர் குறிப்பிட்டதுபோல, வேற்றுமை உணர்ச்சி பல பகுதிகளில் பெருகி வருகிறது. இதன் காரணத்தைத்தான் குறை கூறவேண்டும். அக்காரணம் மேலிட அரசினருடைய பிடிவாதப் போக்கேயாகும். இப்போக்கு இத்தன்மையிலேயே சென்றுகொண்டிருந்தால், 'இறந்து பிறந்த குழந்தை'களைப் போன்றுள்ள அரசியல் திட்டங்களோடுகூட, உயிருடன் பிறந்த குழந்தைகளைப் போன்ற திட்டங்களும் மக்கள் ஆதரவின்றி மறையும் படியான நிலைமையே தோன்றும்!

இவ்வாறு, 19-7-56 'தமிழ் நாடு' இதழ் தலையங்கத்தின் ஒரு பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோஷலிஸ்டு கட்சிக்கு

சின்னம் வேண்டும்

டாக்டர் லோகியா கூறுகிறார்

ஐதராபாத், சூலை 18—

'வரப்போகும் பொதுத் தேர்தலில் சோஷலிஸ்டு கட்சிக்கு சின்னம் கிடைக்காது என்று தேர்தல் அதிகாரி கருதுவது, விவாதத்திற்கு ஒவ்வாத கருத்து' என்று டாக்டர் லோகியா அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

"பல மாநிலங்களில் பெருவாரியான பிரஜா — சோஷலிஸ்டு மாநாடுகள், பி. சோ. கட்சியை சோஷலிஸ்டு கட்சியாக மாற்றுவது என்று தீர்மானித்திருக்கின்றன; எனவே, சோஷலிஸ்டு கட்சிக்கு, பி. சோ. கட்சிக்குத் தரப்படுவதுபோலவே தனியொரு சின்னம் வழங்கப்படவேண்டும்.

'தேவையான மூன்று சதவிகிதத்தைவிட, அதிகமான வாக்குகளை சோஷலிஸ்டு கட்சிபெற முடியும் என்பதைக் காட்டுவதின் மூலம், தேர்தல் கமிஷனின் அறைகூவலை, கட்சித் தோழர்கள் ஏற்க வேண்டுகிறேன்" என்றும் அவர் அறிக்கை கூறுகிறது.

இந்தி சட்டக் குழு நிறுவ சிபாரிசு?

நாட்டுச் சட்டங்கள் யாவும் இந்தியில் தொகுக்கபடுவதற்காம்!

புதுடில்லி, சூலை 18—

நாட்டிலுள்ள சட்டங்கள்யாவும் இந்தியில் தொகுக்கப்பட்டு, இந்தியில் இடம்பெறும் நோக்கத்துடன், 'இந்தி சட்டக் குழு' ஒன்றை நிறுவுவதற்கு, அரசாங்க மொழிக் குழு சிபாரிசு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தேசீய மொழியாக உருது ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தும்!

ஆட்சிமொழியாக இடம் பெறும் வாய்ப்புத் தரப்படவில்லையே!

முஸ்லிம் நலன்களைக்காக்க முஸ்லிம் லீக் அவசியமே

"பாகிஸ்தானுக்கு வித்திட்டு, அது ஏற்பட்டதன் காரணத்தால் முஸ்லிம் லீக்மீது பிறருக்கு ஒருவகை அருவெறுப்பும், சந்தேகமும் தோன்றிவிட்டதென்பது உண்மையே ஆனால், பாகிஸ்தானுக்கு முன்னிருந்த முஸ்லிம் லீகுக்கும், அதற்குப் பின் இயங்கிவரும் முஸ்லிம் லீகுக்குமிடையே வெகுவான வித்தியாசமிருப்பதை முஸ்லிம் தலைவர்கள் பன்முறை தெளிவாக உணர்த்தி விட்டனர். இதை இதர தலைவர்கள் புரிந்து கொள்ளாமலிருப்பது விந்தைதான்.

"இந்திய முஸ்லிம்களும், அவர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமான முஸ்லிம் லீகும், நாட்டின் முன்னேற்றப் பணியில் பகிரங்கமாகக் கடந்த பத்தாண்டுகளாக ஈடுபட்டு வந்திருந்தும் முஸ்லிம் லீகைப் பரிகசிப்பதை மட்டும் இதரர்கள்விட்டபாடில்லை முன்னர் பாகிஸ்தான் கோரிக்கையால் முஸ்லிம்கள்மீது அவர்களுக்கேற்பட்ட அருவெறுப்பும், அவநம்பிக்கையும் குறைந்தபாடில்லை இதன் காரணமாகவே, முஸ்லிம்களுக்கு அரசாங்க நிர்வாகத்திலும், அரசாங்க உத்தியோகங்களிலும் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை.

"பெரும்பாலான முஸ்லிம்கள் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் காரணத்தால் உருது மொழியும்—இது இந்நாட்டின் ஒப்புக்கொள்ளப்பட்ட 14 தேசீய மொழிகளில் ஒன்றாக இருந்தும் -- புறக்கணிக்கப்பட்டு, இன்றுவரை எந்த இராச்சியத்தின் மொழியாகக்கூட ஒப்புக் கொள்ளப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

"இவ்வாறு பலவகையிலும் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் இந்திய முஸ்லிம் சமுதாயம், தன் குறைகளை அரசாங்கத்திடம் முறையிட்டுப் பரிகாரந் தேடுவது குற்றமா? தங்களின் மதக்கலாச்சாரங்களை, அரசியலில் அனுமதிக்கப்பட்டபடி பாதுகாக்குமாறு கோர உரிமையில்லையா? இவைகளுக்காக முஸ்லிம் மக்கள் தனியொரு ஸ்தாபனத்தின்கீழ் ஒன்றுபடுவது அவசியமல்லவா?

"முஸ்லிம் சமுதாய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தனித்தியங்க வேண்டுவதன் அவசியத்தை மேலே ஓரிடத்தில் தெளிவாக்கியிருக்கிறோம். இதை மனத்திற்கொண்டு முஸ்லிம்களும், அரசியலாரும் சிந்திக்கவேண்டும்"

இவ்வாறு, 30-6-56-ல் வெளிவந்துள்ள 'நூருல் இஸ்லாம்' இதழ் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசியல்வாதிகளின் போக்கு

அதிகார வெறிக்கு இடம் தந்ததின் விளைவுகள்

பதீமா ஜின்னா கண்டனம்

கராச்சி, சூலை 18—

"பாகிஸ்தானில் நிலவும் அதிகார வெறி, மக்கள் மனதைத் தொடர்ந்து அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது.

"இந்த அதிகாரவெறி தோல்வந்தாலன்றி, நாடு ஜனநாயகப் பாதையில் முன்னேறுவது இயலாததாகிவிடும்,"

என்று, பெருநான் செய்தி ஒன்றில், தோழியர் பதீமா ஜின்னா தெரிவித்திருக்கிறார்

அவர் மேலும் கூறியுள்ளதாவது :—

"அன்னிய ஆதிபத்தியம் இங்கு நிலவியதின் விளைவாக ஏற்பட்ட இந்த 'அதிகார 'வெறி' என்ற தீங்கு, தொடர்ந்து நீடிக்கிறது.

"சுதந்திரம் பெறுவதற்கு முன் பிருந்ததைவிட இந்த வெறி இப்போது எல்லை தாண்டித் தாண்டவமாடுகிறது; இந்த வெறிக்கு ஒரு சுதந்திர நாட்டில் சிறிதும் இடம் இருக்கக் கூடாது. இதன் விளைவுகளை நாம் கண்முன் காண்கிறோம். இந்த வெறி நீடிப்பதின் பலனாகபிரகடனப்படுத்தப்பட்ட குடியரசு அரசியல் சட்டம் கூட, பொது வாழ்வைத் தூய்மைப்படுத்தவில்லை. மக்களை அவமதிக்கிற—வெறுக்கிற நோக்கம் இன்னும் நீடிக்கிறது.

"அதிகாரத்தில் தாங்களே நீடிக்கவேண்டும் என்ற எண்ணமும், சுயநலப் போக்கும் முடிவில்லாது நீடித்துக் கொண்டிருக்கின்றன."

நஷ்டக் கணக்கு!

புதுடில்லி, சூலை 19—

1954—55-ம் ஆண்டில், 'இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பொரேஷனு'க்கு, ரூ 90,15,000 நஷ்டமேற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது; தேய்மானத்திற்காக ஒதுக்கிய ரூ. 40,60,000-மும் இந்த நஷ்டத்தில் சேர்ந்திருப்பதால், ரொக்க நஷ்டம் ரூ 49,52,000 மட்டுமேதான் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்!

1956 - 57ல் 'அம்பர் சர்க்கா' திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்திய சர்க்கார் சுமார் ரூ - 3,27 00,000 அனுமதித்துள்ளனர். 75,000 அம்பர் சர்க்காக்களைத் தயாரிப்பதற்கும், மேலும் பல உற்பத்தி, பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதற்கும் அத்திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியைப் பரப்புவதில் டில்லியின் தீவிரம்

இலட்சக்கணக்கான ரூபாய் அள்ளி வழங்கப்படுகிறது

புதுடில்லி, சூலை 19—

திட்டக் குழுவோடு கலந்தாலோசித்துக்கொண்டு, இந்தி வழங்காத பகுதிகளில் இந்தியைப் பரப்புவதற்கான வழிவகைகளை, டில்லி சர்க்கார் கல்வி இலாகா ஆராய்ந்து கொண்டிருக்கிறதாம்!

இந்தி வழங்காத மாநிலங்கள், இந்தியைப் பரப்புவதற்காக உருவான திட்டங்கள் வைத்திருக்குமானால் அவற்றை நிறைவேற்றுவதற்கான பண உதவியைத் திட்டக் குழு செய்யவேண்டும் என்று கல்வி இலாகா கோரியுள்ளதாம்!

இந்தி வழங்காத மாநிலங்கள் இந்தியைப் பரப்புவதற்கான திட்டங்களை திட்டக் குழுவிற்கு அனுப்பி, அவற்றை தங்கள் தங்கள் மாநிலத் திட்டங்களோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறார்களாம்!

முதல் திட்ட காலத்தில் கல்வி இலாகா, இந்தி வழங்காத மாநிலங்களில் இந்தி வளர்ச்சிக்காக ரூ. 4,89,870 வரை மானியமாக வழங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. இனியும் தொடர்ந்து இந்தியைப் பரப்புவதற்காக, மாநிலங்களுக்கு மானியம் வழங்கப்படும் என்றும் தெரியவருகிறது.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

மாயூரம் :

15—7—56 மாலை 5 மணிக்கு, மாயூரம் நகர தி. மு கழகச் சார்பில், டாக்டர் வி. எம். முத்து தலைமையில் நடராசன் நினைவு வாசகசாலையிலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு இலட்சிய ஒலியை முழக்கிக்கொண்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக நகரப் பூங்காவை வந்தடைந்தது ஊர்வலத்தின்போது பல பகுதிகளில் கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன

ஊர்வலத்தில் தி. மு. கழகம், மாணவர் கிளை—ஆசிரியர் வேலாயுத மன்றம்—நடராசன் நினைவு வாசகசாலை—திரு. வி. க. படிப்பகம்—நில்லையாடி வள்ளியம்மை படிப்பகம்—மஜீத் மன்றம் ஆகியவை பங்கு பெற்றன.

அம்மையநாயக்கனூர் :

15—7—56 காலை 9-30 மணியளவில், கழக அலுவலகத்தில் தோழர் இரா. அ. பரமசிவம் கொடியேற்றிவைத்தார். அன்று மாலை தோழர் நாக. தங்கபாண்டியன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் இரா. அருணகுமார், இராசன், சோமசுந்தரம், கு. கன்னையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 16-வது வட்டம்:

15—7—56 காலை 8 மணிக்கு, சென்னை 16-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் தெருக்கள்தோறும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன. தோழர் சி. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் எம். ஆர். கண்ணன், குக்மாங்கதன், வ. பா. சின்னையா, பத்மநாபன், ஆசைமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருமணங்கள்

8—7—56 காலை, சென்னை—வண்ணை, மாடசாமி நாடார் தெரு, எண்—8 இல்லத்தில், தோழர் எஸ். ஞானதேசிகன்—தோழியர் அனந்தம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் ஏ. கே. வில்வம், முகவை—ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்களுக்கு வாழ்த்து மடல்கள் பல வாசித்தளிக்கப்பட்டதுடன், பரிசுகளும் வழங்கப்பட்டன. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி - பொறுப்பாளர்.

* * *

15-7-56 காலை, சென்னை புளியந்தோப்பு அம்மாயம்மாள் தெரு 8-வது எண் இல்லத்தில், தோழர் [illegible]பிரமணியம்—தோழியர் பி. என். முத்துலட்சுமி திருமணம் தோழர் என். சீவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சித்தியானந்தம், முகவை—ஆர் எஸ். பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

13-7-56 காலை 9 மணிக்கு, குடந்தை பட்டம் சந்தில், திரு எம். கே. சந்தசாமி தலைமையில், தோழர் இராசமாணிக்கம்—தோழியர் தமயந்தி திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்திப் பல தோழர்கள் பேசினர்.

* * *

ஆத்தூர்—புதுப்பேட்டை மணமகன் இல்லத்தில். தோழர் ஆ. இ. இளையழகன் தலைமையில் தோழர் கெ. அங்கமுத்து—தோழியர் செல்லம்மாள் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் டி. வி. அத்தியப்பன், மா. மணி வாழ்த்துரை வழங்கினர்.

* * *

9—7—56-ல் விருதாசலத்தில் தோழர் காளிமுத்து—தோழியர்—தங்கம்மாள் திருமணம், வி. வி. இராமசாமி படிப்பகத்தில், திரு. வி. வி. இராமசாமி எம்.எல்.சி. தலைமையில் நடைபெற்றது.

* * *

15—7—56-ல் தென்காசியில், தோழர் கே. பெருமாள்—தோழியர் சேங்கம் திருமணம் நடைபெற்றது.

ம. பி. மாநிலத்தில் மூன்று புதிய உணவு ஆராய்ச்சிக்கூடங்கள்

டில்லி சர்க்கார் 75 சதவிகித நிதி உதவும்

நாகபுரி, சூலை 19—

மத்திய பிரதேச மாநில சர்க்கார்—அமராவதி, ஜபல்பூர், ரெய்ப்பூர் ஆகிய இடங்களில் மூன்று உணவு ஆராய்ச்சி நிலையங்களைத் துவக்குவர் என்று தெரிய வருகிறது.

இயற்றிற்கான செலவுகளில் 75 சதவிகிதத்தை டில்லி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்றும் இவை, ரூ. 25 இலட்சம் செலவில் சிறுவப்படும் என்றும் தெரியவருகிறது

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்காக டில்லி சர்க்கார் நிறைவேற்றியுள்ள சட்டத்தினை அமுல் செய்வதற்கு இந்த ஆராய்ச்சிக் கூடங்கள் பயன்படுமாம்

இந்த ஆண்டு இறுதிக்குள் இவை வேலை துவங்கும் என்றும் தெரியவருகிறது.

நாகபுரியில் ஏற்கனவே இது போன்ற ஒரு ஆராய்ச்சிக் கூடம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்கள் அனுமதி

சென்னை, சூலை 20—

சென்னை மாநில மருத்துவக் கல்லூரிகளுக்கு இவ்வாண்டில் 315 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

1,465 பேர் மனுச்செய்து கொண்டனர்; தேர்வு நடைபெற்று சென்னை மருத்துவக் கல்லூரியில் 135 பேர்களும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் 110 பேர்களும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 70 பேர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவிகளுக்கு 20 சதவிகிதம் ஒதுக்கப்பட்டபோதிலும், இவ்வாண்டில் 73 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தியாவில் மீன்துறை அபிவிருத்திக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 12-கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டம்

★

குப்பம்மாள்பட்டி :
(சொட்டைக்கானல் தாலுகா)
தி. மு. கழகத் துவக்க விழா
22—7—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
கே. எஸ். சந்தானம்
மு. வசனப்பித்தன்

முற்றுகைப் போராட்ட

நினைவு நாள் பொதுக்கூட்டம்

★

திருவாரூர் :
கீழ வீதியில்
22—7—56 மாலை 6-மணிக்கு
பேசுவோர்:
கி. மனோகரன்
எஸ். எம். வைத்திலிங்கம்

காச நோயால் பாதிக்கப்பட்டோருக்கு டில்லி சர்க்கார் வழங்கும் உதவி!

கட்ச், சூலை 16—

கட்ச் சர்க்காருக்கு, காச நோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கென உதவுவதற்கென 3,000 ரூபாய்வரை டில்லி சர்க்கார் மானியம் வழங்கியிருக்கின்றனர்; இது, 1956—57-ம் ஆண்டிற்கான உதவி.

இந்தத் தொகை, மருத்துவ மனைகளில் சேர்த்துக்கொள்ளப்படாமல் வீட்டிலிருந்துகொண்டே சிகிச்சை பெறுகிறவர்களுக்கும், விசேட உணவு உண்ண வேண்டும் என்று டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்டிருப்பவர்களுக்கும் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

காச நோய் சிகிச்சை பெறும்

தொழிலாளருக்கு வசதி

மருத்துவ உதவித் திட்ட விதிகள் தளர்த்தப்படுகிறது

புதுடில்லி, சூலை 20—

தொழிலாளர் மருத்துவ உதவித் திட்டத்தின்கீழ் காச நோய்க்கு சிகிச்சை பெறுகிற தொழிலாளர்களுக்கு வசதிகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றனவாம்!

சாதாரணமாக ஒரு தொழிற்சாலையில் தொடர்ந்தாற்போல் 2 ஆண்டு காலம் வேலை செய்த ஒரு தொழிலாளி, காச நோயால் அவதிப்பட்டால், 56 நாள், நோய் கால லீவு' உண்டு. இப்போது தளர்த்தப்பட்டுள்ள விதி முறைகளின்படி, மேற்கொண்டு 18 வாரம் நோய் கால லீவு கிடைக்கும்; ஆனால், இந்தக் காலத்திற்கு, குறைந்த விகிதத்தில், தினசரி சுமார் 12 அணா வீதம்தான் ஊதியம் கொடுக்கப்படும்.

ஒரு தொழிற்சாலையில் 3 ஆண்டு காலம் வேலை செய்த தொழிலாளிக்கு மேற்கொண்டு அதிகப்படியாக ஒரு ஆண்டு காலம் 'நோய் கால லீவு, கொடுக்கப்படும்.

'தளர்த்தப்பட்ட விதிகள் கடந்த மாதம் முதல் தேதி முதல் அமுலுக்கு வந்துவிட்டன' என்று, மக்கள் சபையில், தொழிலாளர் துணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உயிர்வாழ கண்ணொளி இழக்க வேண்டும்

4 வயதுச் சிறுவனுக்கு நேரும் பரிதாபம்

ஆர்லந்தோ (ப்ளோரிடா)
சூலை 18—

மைக் ஸைபோல் என்ற 4 வயதுப் பையன் தன் கண் பார்வையை இழந்துவிடப்போகிறான்; அவர் உயிர்வாழ வேண்டுமானால், அவனது கண்கள் குருடாக்கப்பட வேண்டும் என்ற பரிதாப நிலையை, புற்றுநோய் ரகத்தைச் சேர்ந்ததொரு நோய் ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

ஒரு கத்தோலிக்க பாதிரியாரின் வளர்ப்புப்பிள்ளை, [illegible]

கடந்த ஞாயிறன்று அந்தப் பாதிரியார், அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் நீலத் திரைகளை, அச் சிறுவன் கடைசி முறையாகப் பார்த்துக் களிப்பதற்காகக் குடும்பத்தோடு அழைத்துச் சென்றிருந்தாராம்—ஸ்மயானு கடற்கரைக்கு!

பையன் கடற்கரையில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்கையில், அவன் கண் பார்வை இழக்கப் போவதற்கு அனுதாபம் தெரிவித்து ஆயிரக் கணக்கான செய்திகள் பாதிரியின் இல்லத்தில் குவிந்துவிட்டனவாம்.

பையனுக்கு நடைபெறும் 'அறுவை சிகிச்சை' ஒன்றும் குறிப்பான கஷ்டமுடையதல்ல; ஒரு [illegible] நேரத்தில் முடிவுற்றுவிடும்' [illegible] விட்டால் அந்த [illegible] சீக்கிரமே பையனை பலிகொண்டுவிடும்' என்று டாக்டர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

உயிர் வாழ்வதற்காகக் கண்ணொளியை இழக்கும் பரிதாபம், மனதை உருக்கத்தான் செய்கிறது!

300 பயிற்சி பெற்ற தொழிலாளர்கள்

வேலையிலிருந்து நீக்கம்

பெங்களூர், சூலை 19—

துங்கபத்திரா அணையை அடுத்த தொழிற்சாலையைச் சேர்ந்த 300 தொழிலாளர்கள் அடுத்த மாதம் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று தெரியவருகிறது.

30 பேர்களுக்கு ஏற்கனவே 'நோட்டீசு' பிறப்பிக்கப்பட்டுவிட்டதாம்.

இந்த முடிவை எதிர்த்து தொழிலாளர் சங்கம், இரண்டு தூதுக் குழுக்களை ஆந்திர, மைசூர் முதன் மந்திரிகளைச் சந்திப்பதற்காக கர்னூல், பெங்களூர் நகரங்களுக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிய வருகிறது.

'இந்தத் தொழிற்சாலையை இரயில் பெட்டிகள்—பாலத்திற்கான சாமான்கள் முதலியன தயாரிப்பதற்கான தொழிற்சாலையாக சுலபமாக மாற்ற முடியும் என்றும், நிட்டம்—தொழில் நயமாக்குவது என்றெல்லாம் பேசப்படும் நேரத்தில், அனுபவமும் பயிற்சியும் பெற்ற சுமார் 300 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவது வேடிக்கையானதாயிருக்கிறது' என்றும், தொழிற்சங்கச் செயலாளர் கூறியிருக்கிறார்.

ஹங்கேரி கம்யூனிஸ்டு கட்சி முதல் செயலாளர்

விலகியதற்குக் காரணம் என்ன?

வியன்னா, சூலை 19—

ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதல் செயலாளரான மத்யாஸ் ராகோசி என்பார், தமது பதவியினின்றும் விலகிக் கொண்டாராம்!

தாம் விலகுவதற்கான முக்கியக் காரணம், தம்முடைய முதுமைதான் என்றும், அதிலும் குறிப்பாகக் கடந்த இரண்டாண்டுகளாகவே அவரது உடல் நிலை மிக மோசமாக இருந்ததுதான் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

புதிய கட்சியினர் ஒரே சின்னம் பெற வழி?

தேர்தல் அதிகாரி கூறுகிறார்

திருவனந்தபுரம், சூலை 19—

'புதிய கட்சிகளுக்கு சின்னம் வழங்கமாட்டோம்' என்று கூறிய பிரதம தேர்தல் அதிகாரி, இப்போது புதிய கட்சிகளுக்கு ஒரே வகையான சின்னம் வழங்குவது பற்றி மேலும் சில பேசியிருக்கிறார்.

புதிய கட்சிகள், தங்கள் அபேட்சகர்கள் அனைவரும் ஒரே வகையான சின்னத்தை கோருமாறு செய்ய வேண்டுமாம்; அப்படிச் செய்தால் சுமார் 90 சதவிகித அபேட்சகர்களுக்கு ஒரே சின்னம் நிச்சயம் கிடைத்துவிடும் என்று அவர் நம்புகிறாராம்.

இதுதான், புதிய கட்சிகள் ஒரே வகையான சின்னம் பெறுவதற்காக, சுகுமார் சென் கூறும் வழி. எப்படி இந்த 'அரிய' வழி?

1955-ல், மொத்தம் ரூ. 67,46,390 மதிப்புள்ள தேயிலைத் தயாரிப்பு இயந்திரச் சாதனங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டன.

★★★